227

கருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு நகராட்சி ஆணையர் பணி – திரு. எஸ்.கே. முத்துராஜ், கண்காணிப்பாளர், மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் – வேற்றுப்பணியில் (on deputation) நகராட்சி ஆணையர், நிலை 1 ஆக நியமனம் செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

அரசாணை(பத்தாண்டு)எண்.629 நாள்: 31.12.2007.

படிக்கப்பட்டது:

நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித எண்.59659/99/சி1, நாள் 02.11.2007.

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக ஆணையரின் கருத்துருவினை ஏற்று, தமிழ்நாடு நகராட்சி ஆணையர்களின் சிறப்பு விதிகளில், விதி 6(ii)-ன்கீழ் மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு. எஸ்.கே. முத்துராஜ் என்பவரை நகராட்சி ஆணையர், நிலை 1 ஆக வேற்றுப்பணியில் அரசால் நியமனம் செய்யப்பட்டு அன்னார் பொறுப்பேற்ற நாளிலிருந்து இரண்டாண்டுகள் பணிபுரிய அனுமதிக்கப்படுகிறார்.

2. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 (தமிழ்நாடு மாநிலச் சட்டம் V 1920)-ல், பிரிவு 12 (c)-ன்படி தமிழ்நாடு மாநில ஆளுநர் கீழ்கண்ட பணிநியமனம் செய்கிறார்:-

"மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரியும் திரு. எஸ்.கே. முத்துராஜ் வேற்றுப்பணியில் முதல்நிலை நகராட்சி ஆணையராக பணிநியமனம் செய்யப்படுகிறார்."

3. திரு. எஸ்.கே. முத்துராஜ், கண்காணிப்பாளர், மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்கள், முதல்நிலை நகராட்சி ஆணையராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து அவரது தாய்த்துறையில் பெற்றுவந்த ஊதியத்தையே தொடர்ந்து பெறுவார்.

4. திரு. எஸ்.கே. முத்துராஜ், கண்காணிப்பாளருக்கு உரிய பணியிடம் வழங்குமாறும், அப்பணியிடத்தில் பொறுப்பேற்கும் பொருட்டு, அவரை உடனே மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரக கண்காணிப்பாளர் பணியிலிருந்து விடுவிக்கும்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

கே.தீனபந்து,
அரசுச் செயலர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5.
திரு. எஸ்.கே. முத்துராஜ், கண்காணிப்பாளர், மதுரை மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநரகம் (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக).
கருவூல கணக்குகள் இயக்குநர், சென்னை-108.
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை.

உள்ளாட்சி நிதி கணக்குகள் இயக்குநர், சென்னை–108.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
தமிழ்நாடு மாநில கணக்காயர், சென்னை–18.
தமிழ்நாடு மாநில கணக்காயர், சென்னை–35.

நகல்:–

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.

– செயலாளரின் நேர்முக உதவியாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9. / இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21.12.07

பிரிவு அலுவலர்.